Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 05 | 19 - 06 - 94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 121

## க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1-ல் ஆரம்பம்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகும் என இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இப் பரீட்சை ஆகஸ்ட் 24ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் எக்காரணம் கொண்டும் இப் பரீட்சை குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் ஆரம்பிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் புதிய அறிவிப்பு சிரத்தைக்குரியதொன்று

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் நிபந்தனைகளைத் தவிர்த்து பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பது சிரத்தைக்கு உரியது என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.**

விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்த நிறுத்தத்தை வற்புறுத்தாமல், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வந்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதேசமயம் விடுதலைப்புலிகளின் இவ் அறிவிப்பு குறித்து சிறிலங்கா இராணுவம் அவதானமாகத் தனதுகருத்தைத் தெரிவித்திருப்பதாக கொழும்புப்பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

இராணுவப் பேச்சாளரான கெமுனுகுலதுங்க கருத்துத் தெரிவிக்கையில் அவர்களின் நோக்கத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## மூன்று மாதகால முயற்சியே புதிய தீர்வுத் திட்டம்

### அஷ்ரப் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் கடந்த மூன்று மாத காலத்திற்கும் மேலாக முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய பேச்சுவார்த்தையின் பலாபலன்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான புதிய யோசனையாகும். அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் எம். எச் எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

சம்மாந்துறையில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினையை எந்த வகையிலாவது தீர்த்து வைக்க வேண்டுமென்பதில் தொண்டமான் தீவிர விருப்பம் கொண்டு இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

### விவாகரத்து வழக்கின் போது

## பெண்ணின் சாட்சிகள்மூவர் நீதிமன்றில் கொலை

(கொழும்பு)

கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து விசாரணை நடைபெற்ற போது இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவங்களினால் மூவர் ஸ்தலத்திலேயே மரணம் அடைந்துள்ளனர்.

மேலும் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பெண்ணுக்கு சார்பாக சாட்சி அளிக்க சென்றவர்கள் மீது இவ்வாறு தாக்குதல் நடைபெற்றதாக மேலும் தெரிய வருகின்றது.

## ஊர்காவற்படை உட்பட நால்வரைக் காணவில்லை

(கொழும்பு)

வாழைச்சேனை பொலிஸ் பகுதியில் இருந்து பூனான பகுதி நோக்கி சென்ற இரு ஊர்காவற் படையினரையும் மேலும் இரு உத்தியோகத்தரையும் காணவில்லை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அமைதிக்கான பரிந்துரைகளை புலிகள் முன்வைக்க வேண்டும்

### கனடிய சட்டத்தரணி கோரிக்கை

[ரொரண்டோ]

அமைதிக்கான பரிந்துரைகளை விடுதலைப் புலிகள் விரிவா..முன்வைக்கவேண்டுமென கனடாவைச் சேர்ந்த சட்டத்தரணியான பேர் ஜட்ஸ்

வும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் சிறில

டுமென சட்டத்தரணி பேர் ஜட்ஸ் கேட்டுள்ளார்.

கனடாவைச் சேர்ந்தஇவர்

## துறைமுக தொழிலாளி திடீர் மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறைதுறைமுகத்தில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் திடீரென ஏற்பட்ட இருதய நோயினால் மரணமானார். மயிலிட்டியை சேர்ந்த கருணாநிதி என்ற தொழிலாளியே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் கடமையில் இருந்த போது திடீரென ஏற்பட்ட

(6ஆம் பக்கம்பார்க்க)

## ஐம்பது பொலிசாருக்கு எதிராக முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஐம்பதுக்கு மேற்பட்ட சிறிலங்கா பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கெதிராக கிடைத்துள்ள முறைப்பாடுகளை பொலிஸ் திணைக்களம் விசாரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிரான இந்த முறைப்பாடுகள் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கும் என கூறப்படுகிறது.

இவர்களில் அநேகமானோர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளாவர். ஏ.எஸ்.பி., எஸ் பி. போன்றவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

காடுகளில் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டுதல், கொண்டுசெல்லல், மனித உரிமை மீறல் போன்றவை தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் கிடைத்துள்ளன.

### கிராம எழுச்சி நிறுத்தம்

## பிரேமா கொள்கையை மழுங்கடிக்கும் திட்டம்

(கொழும்பு)

வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டுவரும் கிராம எழுச்சி (கம் உதாவ) திட்டம் இவ்வருடம் ஒத்திவைக்கப்பட்டமை பிரேமா ஆதரவான

நாமத்தையும் அவரது கொள்கையையும் மழுங்கடிக்கும்திட்டம்எனகுறிப்பிட்டஅவர்,இத் திட்டம் பிரேமதாசாவிற்கு மிகவும் நெருக்கமான ஒரு திட்டம் இதனை ஒரு வருடத்

பகுதி நோக்கி சென்ற இரு ஊர்காவற் படையினரையும்

தெரிவித்துள்ளன.

## முஸ்லிம்காங்கிரஸ்ஆதரவை பெற ஐ.தே. க முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் போது முஸ்லிம் காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி முழு முயற்சி எடுத்து வருகிறது. இதற்காக இரு கட்சிப் பிரமுகர்களுக்கும் இடையேயான சந்திப்பு மிக விரைவில் நடைபெறவுள்ளது என ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர, ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி விக்கிரம வீரசூரிய ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று ஜூலை மாதம் 13ம் திகதி மட்டக்களப்பிற்குச் செல்ல உள்ளதாகவும் அப பத்திரிகை தெரிவித்துள்ளது.

## பிரேமதாசா கொலை; பலர் தேடப்படுகின்றனர்

### இரகசியப் பொலிசார் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க ப்ரேமதாசா கொலை தொடர்பாக தற்போது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஆறு பேரையும் அடுத்த மாதம் 27ஆம் திகதி வரை தடுத்து வைப்பதற்கு கொழும்பு மேலதிக நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

பாபு என்றழைக்கப்படும் வீரகுலசிங்கத்துடன் நெருங்கிப் பழகியவர்கள் என்று சொல்லப்படும் இந்திரஜித், செல்லையா ஆகியோர் தேடப்பட்டு வருவதாகவும் பாபுவின் நெருங்கிய உறவினர்கள் பலரையும் தாம் தேடி வருவதாகவும் இரகசியப் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை தனது கடையிலுள்ள பொருள்களை ஏலத்தில் விற்று நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள 64,000 ரூபாவை தனக்குத் திருப்பித்தரும்படி இந்த வழக்கில் முதல் சந்தேக நபரான

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுப்பர் சொனிக் தாக்குதல்

## கண்டனப் பேரணி நடத்த கூட்டுறவுச் சபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கத்தின் அரக்கச் செயலைக் கண்டித்து யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களால் கண்டனப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

அண்மையில் சிறிலங்கா விமானப் படையின் சுப்பர் சொனிக் விமானத்தின் குண்டு வீச்சிற்கு இலக்காகிய நீர்வேலி ப. நோ. கூ. சங்கத் தலைவரின் மரணத்தை ஒட்டி கண்டன ஊர்வலம் ஒன்று யாழ். மாவட்ட கூட்டுறவாளரினால் வரும் செவ்வாய்க் கிழமை நடாத்தப்படவுள்ளது. இவ் ஊர்வலம் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மணிக்கூட்டு வீதி அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ் அரச செயலகம் ஆகியவற்றில் மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இவ் ஊர்வலத்திற்கான முன் ஏற்பாடுகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை செய்து வருகிறது. அது தனது அங்கத்துவ சங்கங்களிற்கு இவ் ஊர்வலம் பற்றிய சகல விபரங்களையும் சுற்றறிக்கை மூலம் அனுப்பி வைத்துள்ளதாக தெரிகிறது.

இதே வேளை கண்டனப் பேரணியில் கூட்டுறவாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)

வாசு முன்வைக்கவேண்டுமென கனடாவைச் சேர்ந்த சட்டத்தரணியான பேர்ஜட்ஸ் கூறியுள்ளார். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அவர் விரிவான கடிதமொன்றை எழுதியிருப்பதாக தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதைத் தொடர்ந்து அமைதிக்கானவழிமுறைகளையும்அவர்கள்முன்வைக்கவேண்டுமென ஜட்ஸ் கேட்டுள்ளார்.

கனடாவைச் சேர்ந்தஇவர் முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் அமைச்சர் தொண்டமானை ஈடுபடும்படி கோரிக்கைவிடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## கந்தளாய் வாவியை கடக்க முயன்ற பொலிஸ் படகுமீது புலிகள் தாக்குதல்

### இரண்டு பொலிசார் பலியென அறிவிப்பு

(கொழும்பு)

கந்தளாய் வாவியை படகு மூலம் கடக்க முயன்ற சிறிலங்கா பொலிசார்மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிசார் பலியாகியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட பொலிஸ் தலைமையலுவலகம், கந்தளாய் கந்தலாவ பகுதியில் கந்தளாய் வாவியை பொலிஸ் கோஷ்டியொன்று கடக்க முயன்றபோது காடுகளிலிருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

இவர்கள் பயணம் செய்த படகுமீது புலிகள் நடாத்திய தாக்குதலின்போது இவ்விரு பொலிசாரும் கொல்லப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது

## களனிகங்கையில் மிதந்த பிரதேச சபை உறுப்பினர் சடலம்

(கொழும்பு)

களனி பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின்சடலம் களனி கங்கையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக பெலியகொட பொலிசார் தெரிவித்துள்ளனர்.

களனி பிரதேச சபை ஐக்கிய தேசிய கட்சியைச்சேர்ந்த உறுப்பினரான காமினிமிதுன் (வயது 47) என்ற உறுப்பினரே மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு களனி கங்கையில் வீசப்பட்டுள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தொண்டமான்-அஷ்ரப் யோசனை முஸ்லிம்களுக்கு பாதகமானவை

### முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்குமுன்வைத்துள்ள யோசனைகள் முஸ்லிம்களுக்குப் பாதகமானவை. தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் கூட்டாக 1988இல் வெளியிட்ட பிரேரணையே வடக்குக் கிழக்கு தமிழ் பேசும மக்களுக்கு கூடிய நன்மைபயக்கும் என முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி செயலாளர் எம். ஐ. எம். முஹியத்தீன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொண்டமான்-அஷ்ரப் பிரேரணையில் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படவில்லை. தமிழருக்கு மாநில சபை, முஸ்லிம்களுக்கு மாநில சபைக்கு உட்பட்ட பிராந்திய சபை, முஸ்லிம்கள் தரம் குறைக்கப்பட்டுள்ளனர். வடக்கு முஸ்லிம்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப்பிரேரணை ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாநிலத்தில் தமிழர் முஸ்லிம்கள் ஐக்கியத்தையும் தனித்துவத்தையும் பேணிக்காத்து அவரவர் இன உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது-

இவ்வருடம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு பிரேமா ஆதரவான தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் காலிங்க ஒபேவன்ச கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது பிரேமதாசாவின் மிகவும் நெருக்கமான ஒரு திட்டம் இதனை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கத் தீர்மானித்திருப்பது பிரேமதாசாவின் கொள்கையை மழுங்கடிக்கும் ஒரு முயற்சி என்றார்

## சிரேஷ்ட அரசியல்வாதி மீது ஆதரவாளர்கள் புகார்

(கொழும்பு)

மத்தியமாகாணத்தில் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரினதும் அவரது குடும்பத்தினரதும் நடவடிக்கையினால் அப்பகுதி ஐ. தே- க- உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் விரக்தி அடைந்திருப்பதாக ஜனாதிபதி டி- பி- விஜேதுங்காவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது-

ஐ. தே- க- அமைச்சர்கள் உறுப்பினர்கள் நடத்தை தொடர்பாக இரகசியமாக ஆராய டி- பி- விஜேதுங்காவின் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்ட குழுவே இவ் அறிவிப்பை விடுத்துள்ளது இக் குழுவில் ஜனாதிபதியின் மேலதிக இணைப்பாளர்சரத் அமுனுகம இக் குழுவில் அங்கம் வகிப்பதாகவும் தெரிய வருகிறது-

### பிரிட்டிஷ் அன்பளிப்பு

## எஞ்சியுள்ள உபகரணங்கள் விரைவில் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கென பிரிட்டிஷ் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டு, தற்சமயம் கொழும்பில் எஞ்சியுள்ள மருத்துவ உபகரணங்களை எடுத்து வருவதற்கான கப்பற் கட்டணத்தை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரே பொறுப்பேற்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இது வரையும் இம் மருத்துவ உபகரணங்கள் கப்பல் வசதியீனங்கள் காரணமாக சிறிய சிறிய தொகுதிகளாக இங்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே எஞ்சியுள்ள மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் ஒரே தொகுதியாக எடுத்து வரப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (பா, தி)

## மனித முன். நடுநிலையம் நஷ்ட ஈடு கோருகிறது

(குருநகர்)

கடந்த 11 ஆம் திகதி இரவு 11.30மணிக்கு மண்டைதீவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணை வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்துள்ள தொண்டர் நிறுவனங்களில் ஒன்றான யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தை யாழ்.ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நேற்று முன்தினம் பிற்பகல் சென்று பார்வையிட்டார்.

அதே வேளை நிலையத்தின் சேதத்தை பார்வையிட்டு நஷ்ட ஈட்டை பெற்றுத் தரும்படியான கோரிக்கையை நிலைய நிர்வாகம்விடுத்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நிலைய சேதங்களைப் பார்வையிட்ட யாழ். ஆயர் பின்னர் நிலைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு திரும்பினார்.

(21)

## வரி விளம்பரம்

### வேலை வாய்ப்பு

இரும்பு மரக்கடைச்சல் வேலையில் அனுபவமுள்ளவர்கட்கு உடன் வேலைவாய்ப்புண்டு. நேரில் வரவும். யுனிரெக் பொறியியல் நிறுவனம் வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம். (8603)

### தேவை

தேங்காய் சிரட்டைகள் சோடி 60 சதப்படி கொள்வனவு செய்யப்படும். யுனிரெக் பொறியியல் நிறுவனம் வெலிங்டன் சந்தி. (8604)

### தவறிவிட்டது

14-06-94 அன்று இராஜகுமார் லூசியா (இல. 5380 32832v) என்பவாது அடையாள அட்டையும், பிள்ளைகளின் மூன்று படங்களும், அநுமதி மறுப்புப்பத்திரமும் டேவிட் வீதிக்கும் - கொக்குவில் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 6/3, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். 500/- சன்மானம் வழங்கப்படும். (8601)

### இனாம்

மில்க்வைற் தொழிலகத்தில் 450 கிராம் சலவைப்பவுடர் பெட்டி ஒன்று வாங்குபவர்கட்கு நயினைஸ்ரீ நாகபூஷணி அம்மன் வர்ணப்படம் அன்பளிப்பாக வழங்கப்படும் இச்சலுகை 23-6-94 வரை மட்டுமே, ''மில்க்வைற்'' (சி-9829)

### ஆட்கள் தேவை

பலசரக்கு கடைக்கும் சைக்கிள் கடைக்கும் நல்ல அநுபவமுள்ள ஆட்கள் தேவை. தொடர்பு புஸ்பா களஞ்சியம் 707, நெடுங்குளம் சந்தி, கண்டி வீதி அரியாலை, யாழ்ப்பாணம். (8600)

### நினைவுகள் அழிவதில்லை

பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட கையூர் தியாகிகளின் வீரக் கதை. விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். (8568)


## WANTED TEACHERS

**ST. PATRICK'S COLLEGE**
**JAFFNA.**

A full-time teacher for

| | |
|---|---|
| English | for Yrs. 6 - 11 |
| Mathematics | for Yrs. 6 - 11 |
| Botany | for Yrs. 9 - 12 |
| Physics | for Yrs. 9 - 12 |

Apply before 29, June 1994.
Please quote Ref. No. 18694.

Applications after 29, June 1994 will not be entertained.

RECTOR

(சி-9828)



தாய்மார்களுக்கு நற்செய்தி
பளிச்சிடும் வெண்மையை
தந்திடும் ஒரே நீலம்

## ★ றோயல் நீலம் ★

- பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது

**றோயல் நீலம்**

- வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது

**றோயல் நீலம்**

- ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல் பட்டென பளிச்சிடுவது

றோயல் நீலம் ஒன்று தான்.

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது
றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

**சில்லறை விலை ரூ. 6.50 மட்டுமே**

சந்தைப்படுத்துவோர்:

## றோயல் இன்டஸ்றீஸ்,

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-9597)


# நினைவு கூருகின்றோம் ... 19-06-1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் மன்னார்-நாச்சிகுடா அன்னைமேரி படகில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 32 தமிழர்கள்.

யாழ்-வசாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தினுள் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**கிளாஸ்நிக்கோ** (சாமித்தம்பி இந்திரகுமார்-கும்புறுமூலை-மட்டு)

1988-ம் ஆண்டு அம்பாறை-பாண்டிருப்புப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**லெப்.சுந்தர்** (சின்னத்தம்பி சிவானந்தசிங்கம்-காரைதீவு 03-அம்பாறை)

1989-ம் ஆண்டு திருமலை-மூதூர் எல். பி. 2 பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய.

**2-ம் லெப்.புவிராஜ்** (வே. கிருஷ்ணகுமார்-கங்குவேலி, மூதூர்-திருமலை)

யாழ்-திருநெல்வேலியில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கண்ணாடி - பேபி** (சண்முகம் உதயவர்மன்-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**சண்** (நடராசா சண்முகநாதன்-காட்டுப்புலானை, கோப்பாய்வடக்கு-யாழ்)

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வயோதிபர்.

தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தங்கவேலாயுதம்** (- - தாளையடி வீதி, மயிலிட்டி)

1990-ம் ஆண்டு அம்பாறை-பொத்துவில் கொட்டுகலப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**குயிலி** (- - அம்பாறை)

**வீரமணி** (சு. இராஜேந்திரன் -கிரான்-மட்டு)

**அசோகன்** (- - - ஆரையம்பதி-மட்டு)

**காளிதாஸ்** (- - - பெரியபுல்லுமலை-மட்டு)

**நெல்சன்** (- - - மட்டுநகர்)

**வின்சன்** (- - - ஏறாவூர்-மட்டு)

**ஜின்னா** (லெப்பைத்தம்பி செய்யனூர், ஓட்டமாவடி-மட்டு)

திருமலை-மூதூர், எல். பி. 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சத்தியன்** (அருளம்பலம் பேரின்பராசா-மூதூர்-திருமலை)

யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.பூபதி** (குமாரசிங்கம் குமாரசங்கர்-கந்தளாய்-திருமலை)

**கப்டன் சேரன்** (கந்தையா சேனாதிராஜா-ஓதியமலை-மணலாறு)

**கப்டன் அந்தோனி** (ஜேக்கப் சத்தியசீலன் - எமில் நகர்-மன்னார்)

**லெப்.வக்கீல்** (செல்லையா உருத்திரதாஸ்-மீனாட்சியம்மன் வீதி, கொட்டடி-யாழ்)

**சுருளி** (கந்தையா நந்தபாலன்-குடியேற்றத்திட்டம், திருநெல்வேலி-யாழ்)

**சதீஸ்** (உமாபதி சதீஸ்குமார்-மணிக்கூட்டு வீதி-யாழ்ப்பாணம்)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**கும்பன்** (இராமச்சந்திரன்விக்கினேசா-பறாளாய் வீதி-சுழிபுரம்)

அம்பாறையில் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

அம்பாறை-கல்முனைப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது காணாமற்போன மட்டு - மருத்துவமனை வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன். மற்றும் மட்டுநகரில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இதே இடத்தைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். சுங்கன் கேணிப்பகுதியில் உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

யாழ்-ஏழாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த தமிழ்ச் சிறுவன்.

1991-ம் ஆண்டு வவுனியா-நேரியாமோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**வினோத்** (பா. ரவீந்திரன் -5-ம் குறிச்சி, ஏறாவூர் - மட்டு)

**குமார்** ( - பரமநாதன்- கடற்கரைச்சேனை, மூதூர் திருமலை)

**கப்டன் விஜி** (கந்தையா கனகசபாபதி - சாமிப்புலம், நல்லூர் - பூநகரி)

**லெப். சின்னச்சுதா பாப்பி** (வைத்திலிங்கம் பரமலிங்கம் - நாச்சிமார்கோயிலடி - அராலி தெற்கு)

**2-ம் லெப். கண்ணையா** (வேலாயுதம்சிவகுமார் - நீர்வேலி - யாழ்.

**பசிலோன்-கபிலோன்** (நவரத்தினம் உதயகிருஷ்ணன் - தாளையடி, பண்டத்தரிப்பு யாழ்)

**பாரதி** (சதாசிவம் திவாகரன் - பலகாடு, காரை நகர் - யாழ்)

**ஆனந்தகுமார்** (சங்கர் சுப்பிரமணியஐயர் ஆனந்தராஜ் - மடத்தடி ஒழுங்கை - மானிப்பாய் தெற்கு)

**பாரி** (இராசரத்தினம் வித்தியானந்தன் - நீர்வேலி தெற்கு - யாழ்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**மயூரன்** (பரமதாஸ் மில்ரன் - சங்கானை மேற்கு - யாழ்)

**முரளி** (பசுபதி சுகந்தகுமார் - ஏக்கர்மில், ஊரெழு கிழக்கு - யாழ்)

**நாதன்** (சிவலிங்கம் உதயகுமார் - தாளையடி, மருதங்கேணி - யாழ்)

மட்டு - மண்டூரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1993ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். மருதவாணன்-விஜித்** (சாமித்தம்பி புண்ணியமூர்த்தி - சந்திவெளி-மட்டு)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

கதை. விற்பனையாகிறது-
வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். (8568)

## புனரமைப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபையினர் இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்து தூர்ந்து போன மலசல கூடங்களை புனரமைப்பு செய்து வருகின்றனர்.

நகரசபை செயலாளர் திரு. கே. சண்முகநாதன் அவர்களின் பணிப்பின் பேரில் முனையிலும், மீன்சந்தைப் பகுதியிலும் உள்ள மலசல கூடங்கள் புனரமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளன. மேலும் சேதமடைந்த மலசல கூடங்கள் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை செயலாளர் மேற்கொண்டு வருகின்றார்.

அதேசமயம் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்ற பகுதிகளில்குழாய்க்கிணறுகள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதன் முதற் கட்டமாக ஹாட்லிக் கல்லூரி வீதியில் ஒரு குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (யோ)

## றுகுணு நாளை வரும்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'றுகுணு' கப்பல் 925 மெட்றிக் தொன் மாவுடனும் 16 மெட்றிக் தொன் தேயிலையுடனும் நாளை திங்கட்கிழமை வந்து சேரும். இக்கப்பலில் ஒய்வூதிய வவுச்சர்களும் வரவுள்ளன.

அதேசமயம் இத்துறைமுகத்தில்மண்ணெண்ணெய்பரல்களை இறக்கி முடிக்கும் 'மாகோ' கப்பல் கொழும்பு திரும்பி மேலும் 7 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயையும் ஆயிரம் பரல் தாரையும் எடுத்துவரும்.

(யோ)

---

நீர்வேலி ப. நோ. கூ. சங்க தலைவர்

# வே. சின்னத்தம்பி அவர்கள்

22-05-94 அன்று விமானக் குண்டுவீச்சால் கொல்லப்பட்டதைக் கண்டித்து 21-06-94 அன்று நடைபெறும்

# கண்டன ஊர்வலத்தில்

தீவகக் கோட்டத்திற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினது பணிப்பாளர்கள், பணியாளர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள் அனைவரும் அணி திரண்டு

## எமது ஏகோபித்த கண்டனத்தை தெரிவிப்போம்.

பேரினவாத அரசின் கொடுமைகளை உடைத்தெறிய - இங்கு கூட்டுறவாளர் பெரும் புயலென வாரீர்.

புங்குடுதீவு -நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்,

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்,

காரைநகர் ப.நோ.கூ. சங்கம்,

வேலணை ப.நோ.கூ. சங்கம்.

## தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்

(சி-9830)

---

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-9826)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
01 - 07 - 1924

மறைவு:
26 - 06 - 1993



அமரர்

## திரு. பொன்னையா தியாகராசா அவர்கள்

(இளைப்பாறிய அதிபர், யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை)

அன்பினால் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி
பண்பிலே எமை உயர்த்தி
பாசமுடன் எமை வளர்த்து
பாரினிலே தவிக்க விட்டு
பறந்தோடிச் சென்றீரப்பா
உனையிழந்து நாமிங்கு
உற்றதுயர் கொஞ்சமல்ல.

ஓராண்டே சென்றாலும் நீங்காது உங்கள் நினைவு உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மண்கும்பான் மேற்கு.
19-06-94.

(8605)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

# உதைபந்தாட்ட உலக விளையாட்டு விழா அமெரிக்காவில் கோலாகல ஆரம்பம்

உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒரு விளையாட்டு விழா என்றால் அந்தப் பெருமை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கே உரியதாகும். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இப்போட்டிகள் தற்போது ஐக்கிய அமெரிக்க நாட்டில் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சர்வதேச அளவில் ஒழுங்கமைக்கப்பட்ட Fifa எனும் உதைபந்தாட்ட அமைப்பு 1904ல் பாரிசில் உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அமைந்திருந்தது, உலகளாவிய ரீதியில் ஒரு உதைபந்தாட்டப் போட்டியொன்றை நடாத்துவதாகும். ஆனால் இது சாத்தியமாகுவதற்கு 26 வருடகாலம் தேவைப்பட்டது. ஜூல்ஸ் ரிமெட் என்பவரின் அயராத முயற்சியால் 1930-ல் முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி உருகுவே நாட்டில் நடாத்தப்பட்டது. இப்போட்டியில் வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம், அவரது பெயராலேயே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கிண்ணம் 30 செ. மீற். மட்டுமே உயரமுடைய முழுத்தங்கத்தினாலான தாகும். 1970-ல் பிறேசில் மூன்றாவது முறையாக இக்கிண்ணத்தைத் தட்டிக் கொண்டதும் அது அவர்களுக்கே சொந்தமாயிற்று. இது 1983-ல் களவாடப்பட்டு பின்னர் இது வரை கண்டு பிடிக்கப்படவேயில்லை.

1974-ல் FIFA World Cup எனும் புதிய வெற்றிக்கிண்ணம் அறிமுகமாயிற்று. இது தங்கத்தினால் செய்யப்பட்டது. 50 செ.மீ. உயரமுடையது 17 வெற்றியடையும் நாடுகளை பொறிக்கும் வகையில் அமைந்துள்ளது இக்கிண்ணம் இவ்வகையில் 2042-ல் புதிய கிண்ணம் ஒன்று அறிமுகமாகும்,

1930 முதல் 1990 வரை 14 உலகக்கிண்ணச் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இப்போட்டிகளில் இத்தாலி, மே. ஜேர்மனி, பிறேசில் என்பன தலா 3 முறை கிண்ணத்தைப் பெற்றுள்ளன. ஆஜென்டீனாவும்உருகுவேயும் இவ்விரண்டு முறை கிண்ண

ப்பிய நாடுகள், 4 தெ. அமெரிக்க நாடுகள், 3 ஆபிரிக்க நாடுகள், வட அமெரிக்க நாடுகள் 2, ஆசிய நாடுகள் 2 என்றவாறு 24 நாடுகள் உலகக் கிண்ணப்போட்டி 94-ல் பங்குகொள்கின்றன. அடுத்த உலகக்கிண்ணப் போட்டியில் ஆசியா ஆபிரிக்கா பங்குபற்றுதலை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று FIFA அறிவித்துள்ளது.



உலக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம்

முதலில் 24 நாடுகளும் தலா 4 நாடுகள் கொண்ட 6 பிரிவுகளாகப் (A - F) பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாக தமக்கிடையில் ஒவ்வொரு முறை சந்தித்துக் கொள்வார்கள். இதன்பின் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு அணிகளும் மேலும் 3-ம் இடம் பெற்ற அணிகளுள் திறமைமிக்க 4 அணிகளும் அடுத்தசுற்றுக்குத் தகுதி பெறும். முதற்சுற்றில் ஆட்டமொன்றில் வெற்றி பெறும் அணிக்கு 3 புள்ளிகளும் சரிசமமாகும் அணிக்கு 1 புள்ளியும் என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும். எவ்விதத்திலும் வெற்றியைப் பெற்றாலே அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற இயலும் என்றொரு நிலையை இது உருவாக்கும். இதனைத் தொடர்ந்து வரும் ஆட்டங்கள் விலகல் முறையிலேயே அமைந்திருக்கும். 16-8-4-2-1 என்றவாறு வெற்றிக்கிண்ணத்தை நோக்கி நாடுகள் நகரும்.

இறுதிப் போட்டிக்கான இந்த 24 நாடுகளைத் தெரிவு செய்யும் ஆரம்ப கட்ட பிராந்தியச் சுற்றுப் போட்டிகள் 91 டிசம்பரிலேயே ஆரம்பமாகியிருந்தன. மொத்தம் 143 உலக நாடுகள் 491 போட்டிகளில் பங்குபற்றின. இத்தொடரின் ஒரு துக்கமான சம்பவம் என்னவெனில் கடந்த வருடம் ஆரம்பச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவெனச் சென்று கொண்டிருந்த சாம்பிய அணியின் 18 வீரர்களும் விமான விபத்தொன்றில் பலியாகியதாகும்.


ஐக்கிய அமெரிக்க நாட்டின் 9 முக்கிய நகரங்களில் இப்போட்டிகள் நடைபெற இருக்கின்றன. மொத்தம் 52 போட்டிகள்இச் சுற்றுப்போட்டியில் நடைபெறும். சரியாக ஒரு மாதகாலம் போட்டிகள் தொடரும் இறுதிப் போட்டி ஜூலை 17-ம் திகதி லொஸ் எஞ்சல்ஸில் உள்ள றோஸ் போல் (ROSE BOWL STADIUM) அரங்கில் நடைபெறும் இவ்வரங்கு ஒரு இலட்சத்துக்கு மேல்பட்ட பார்வையாளரை அடக்கத்தக்கது

மேலும் இந்த உலகக் கிண்ண உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான செலவுகள் பிரமிப்பைத்தருவன ஏறத்தாழ 4500 கோடி ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. இத்தொகையில் கணிசமான பங்கு நுழைவுச் சீட்டு விற்பனை, தொலைக்காட்சி உரிமைகள், விளம்பரங்கள் மூலம் பெறப்பட்டுள்ளன. கொகாகோலா நிறுவனம் கொடுத்துள்ள தொகைமட்டும் 60 கோடி ரூபா. நுழைவுச்சீட்டொன்றின் விலை 30000/- ரூபாய். இவை எல்லாம் ஐ. அமெரிக்காவின் ஆடம்பரத்தைக் காட்டும் அடையாளங்களாகவும் காணப்படுகின்றன.

A பிரிவில் ஐ. அமெரிக்கா சுவிட்சலாந்து, கொலம்பியா றோமானியா அடங்குகின்றன இங்கு கொலம்பியா, பலம் வாய்ந்த இளம் அணியாகக் காணப்படுகின்றது. றோமானிய விளையாட்டு வீரர்கள் 8ப் டேர் ஐரோப்பிய கழகங்களில் தொழில் சார் வீரர்கள் இவ்வகையில் இந்நாடுகள். இரண்டும் முதல் சுற்றில் தேறலாம் என்பது சில விமர்சகர்களின் கணிப்பு.

B பிரிவு பிரேசிலுக்கு இலகுவானதாக அமையலாம் என்கிறார்கள் விமர்சகர்கள் காரணம், மற்றைய நாடுகள் கமரூன், சுவீடன், ரஷ்யா.

C பிரிவிலும் ஜேர்மனி. இலகுவாகத் தடை தாண்டும் என்ற கருத்துநிலவுகின்றது. பொலிவியா ஸ்பானியா. தென் கொரிய, நாடுகளை விட ஜேர்மனி மிகப் பலம் வாய்ந்ததாககணிக்கப்பட்டுள்ளது.



D' பிரிவில் ஆர்ஜன்டீனாவும் பல்கேரியாவும் முதல் சுற்றில் தகுதியடையக் கூடும் என எதிர்பார்க்கப்படும் அதே வேளை ஆர்ஜன்டீனா உண்மையில் 90-ல் இருந்தது போன்ற பலமான அணிதானா என்ற வினாவையும் எழுப்புகின்றார்கள்.

இன்னொரு முக்கிய பிரிவு இத்தாலி கலந்து கொள்ளும் E' பிரிவாகும். இப் பிரிவில் அயர்லாந்து, நோர்வே, மெக்சிக்கோ ஏனைய அணிகள், இத்தாலி இச்சுற்றில் தகுதி பெறும் என்றாலும் அடுத்த நாடு எது என்பதைக் கூறுவது கடினம் என்கிறார்கள் விமர்சகர்கள். மேலும் இந்தப் பிரிவே மிகக்கடினமான பிரிவு என்னும் கருத்தை முன்வைக்கிறார்கள்;

F' அணியில் நெதர்லாந்து, பெல்ஜியம், மொறாக்கோ, சவூதிஅரேபியா நான்கிலும் முதல் இரண்டும் தகுதிபெறும் வாய்ப்பு அதிகம் என்பதே பொதுவான கருத்தாகும்.

எனினும் இத்தாலி, ஜேர்மனி, பிரேசில் ஆகிய நாடுகளே வெற்றிக் கிண்ணத்தைப் பெறும் ஆற்றலைக் கொண்டவை எனக் கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் போட்டி ஆரம்பமாகியுள்ள இரண்டொரு தினங்களில் இதனைத் தீர்மானிக்க இயலாது. அதுமட்டுமன்றி உதைபந்தாட்டம் பல ஆச்சரியங்களைத் தரக் கூடிய விளையாட்டாக இருப்பதால் ஜூலை 17-ல் நடைபெறப் போகும் இறுதியாட்டம்வரை பொறுத்திருப்பதே பொருத்தமான செயலாக இருக்கும்.

- நிர்மலன்

# ஊரெழு றோயலுக்கு சம்பியன் பட்டம்

உதைபந்தாட்ட இரசிகர்களினால் மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்டதும், பரபரப்பாகப் பேசப்பட்டதுமானஉதைபந்தாட்ட இறுதிப் போட்டிஒன்றுகடந்த4ம்திகதி மாலை உரும்பராய் இந்துக் கல்லூரி'விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தின் முன்னணிக் கழகங்கள் பல பங்கு பற்றிய இச் சுற்றுப் போட்டி மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டது. இவ் இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன் துறை இளம் றோயல் விளையாட்டுக் கழகத்தினர் மோதினர்.

போட்டி ஆரம்பத்தில் சற்று விறுவிறுப்பு குறைந்து காணப்பட்டாலும், இடைவேளைக்குச் சற்று முன்பாக உற்சாகம் கூடிய விளையாட்டாக மாறி, போட்டி முடிவுறும் வரை மிகவும் விறுவிறுப்பாகவே நடந்தது.

முதல் பாதியில் இளம் றோயல் விளையாட்டுக் கழகத்தினருக்கு இரு ''கோல்கள்' போடக் கூடிய இலகுவான சந்தர்ப்பங்கள் இருந்தும் அவற்றை பயன்படுத்தத் தவறிவிட்டனர்

இடை வேளைக்குப் பின்னர் இரு தரப்பு வீரர்களும் உத்வேகத்துடன் ஆடினாலும், ஊரெழு விளையாட்டுக் கழகத்தினர் ''கோல்'' போடுவதற்குப் பெரு முயற்சி எடுத்த போதும், இளம் றோயல் விளையாட்டுக் கழகத்தின் பின் காப்பு வீரர்களின் திறமையான விளையாட்டினால் அவர்களது முயற்சி தடுக்கப்பட்டது. இருப்பினும் போட்டி முடிவடைய 8 நிமிடங்கள் இருக்கும் பொழுது ஊரெழு விளையாட்டுக் கழகத்தின் முன்னணி ஆட்டக்காரர்களின் சுறுசுறுப்பான விளையாட்டினால் அவர்கள் ஒரு (01) ''கோலை'' ப் போட்டுச் ''சம்பியன்'' பட்டத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

இப் போட்டியில், எல்லாப் போட்டிகளிலும் மிகவும் திறமையாக விளையாடுபவர் எனப் பெயர் பெற்றவரும், இரசிகர்களினால் அன்புடன் ''வெள்ளை'' என அழைக்கப்படும் ஊரெழு விளையாட்டுக் கழக வீரருக்கு போட்டியின் ''சிறப்பு வீரர்'' விருது வழங்கப்பட்டது. இதே சமயம்காங்கேசன்துறைஇளம் றோயல் விளையாட்டுக் கழகத்தின் முன்காப்பு வீரர்களின் விடாமுயற்சியான விளையாட்டுஅவரதுவிளையாட்டைகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தது என்றே கூறலாம்.

க. அருளம்பலம்

# ஜொலிஸ்ரார் கிண்ணத்தை சென்றலைட்ஸ் வென்றது

கிண்ணத்தைப் பெற்றுள்ளன. ஆஜென்டீனாவும் உருகுவேயும் இவ்விரண்டு முறை கிண்ணத்தை வென்றுள்ளன. ஐரோப்பா இலத்தீன் அமெரிக்க கண்டங்களைக் கடந்து இன்னமும் இக்கிண்ணம் செல்லவில்லையென்பது அவதானிக்கத்தக்கது. 1990-லேமே ஜேர்மனி ஆர்ஜென்டீனாவுடன் மோதி இக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

ஐரோப்பிய நாடுகளின் பங்குபற்றுதல் இங்கு அதிகமாக இருத்தல் அவதானிக்கத்தக்கது. இம்முறை 13 ஐரோ

# விளையாட்டு அரங்கு

## 15, 17 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கான

# பாடசாலை கிரிக்கெட் போட்டிகள் பரியோவான் கல்லூரி முன்னணியில்

யாழ் மாவட்டத்தில் தற்போது வெகு ஆர்வத்துடன் ரசிகர்களைக் கவர்ந்திருக்கும் சுற்றுப் போட்டி 15,17 வயதுக் கிடைப்பட்ட பாடசாலை மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளாகும். இப் போட்டிகளை யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றது. 12 பாடசாலைகளின் அங்கத்துவத்தைக் கொண்டதே இவ்வமைப்பாகும். இம் முறை ஹாட்லிக் கல்லூரி தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் இச் சுற்றுப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

அரை இறுதி ஆட்டங்கள் 26-6ல் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வேளையில் பாடசாலைகள் பெற்றுள்ள புள்ளிகளை இங்கு தருகிறோம். சில பாடசாலைகள் நேர காலத்திற்கு அமைப்பின் செயலாளருக்கு விபரங்களை அனுப்பாமையால் பூரணமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை கடந்த வருடம் 17 வயதுக்கு கீழ் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியும், 15 வயதுக்குக் கீழ் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வெற்றிவாகை சூடினார்கள்.

### 15 வயதுக்குட்பட்டோர்

#### குழு 'A'

| | கலந்து கொண்ட ஆட்டங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| கொக்குவில் இந்துக்கல்லூரி | 2 | 3.17 |
| யாழ். மத்திய கல்லூரி | 2 | 10.45 |
| சென். பற்றிக்ஸ் கல்லூரி | 2 | 20.73 |
| யாழ். இந்துக்கல்லூரி | 2 | 22 36 |
| மகாஜனாக் கல்லூரி | 2 | 3.43 |

#### குழு 'B'

| | | |
|---|---|---|
| பரிசுத்த யோவான் கல்லூரி | 3 | 25.52 |
| யாழ்ப்பாணக்கல்லூரி | 2 | 3.33 |
| ஸ்கந்தவரோதயக்கல்லூரி | 2 | 4.49 |
| சுனகரத்தினம் ம.ம. வித்தி. | 3 | 23.73 |

### 17 வயதின் கீழ்

#### குழு 'A'

| | கலந்து கொண்ட ஆட்டங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| யாழ் இந்துக்கல்லூரி | 2 | 4.15 |
| ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 2 | 4.05 |
| கொக்குவில் இந்துக்கல்லூரி | 2 | 22.35 |
| யாழ் மத்திய கல்லூரி | 2 | 22.22 |
| யாழ்ப்பாணக்கல்லூரி - (விபரங்கள் அனுப்பப்படவில்லை) | | |

#### குழு 'B'

| | | |
|---|---|---|
| பரிசுத்த யோவான் கல். | 3 | 34 64 |
| சென். பற்றிக்ஸ் கல்லூரி | 2 | 16.59 |
| மானிப்பாய் இந்துக்கல்லூரி | 2 | 11.11 |
| மகாஜனாக் கல்லூரி | 2 | 2.24 |
| யூனியன் கல்லூரி | 1 | 1.64 |

புள்ளிகள் வழங்கப்படும் முறை:
100 ஓட்டங்களுக்கு - 1 புள்ளி
10 விக்கெட்டுகள் வீழ்த்தினால் - 1 புள்ளி
முதல் இனிங்ஸ் வெற்றிக்கு - 5 புள்ளிகள்
முழுமையாகப் பெறப்படும் வெற்றிக்கு - 9 புள்ளிகள்

# சென்றலைட்ஸ் வென்றது

94-ம் ஆண்டுக்கான ஜொலி ஸ்ரார் கிண்ணச் சுற்றுப் போட்டி நிறைவடைந்துள்ளது. இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் - சென்றலைட்ஸ் அணியினர் மோதினர். வெற்றிக் கிண்ணத்தை சென்றலைட்ஸ் அணியினர் பெற்றுக் கொண்டனர். குறுகிய காலத்தில் சிறப்பாக இத்தொடரை நடாத்திய ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

இவ்விறுதிப் போட்டி பற்றி கிரிக்கெட் ரசிகர்கள் பல்வேறு உணர்வலைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள். இரண்டு அணிகளும் ஒன்றிற்கொன்று சளைத்தவையல்ல என்பதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் விவேகமாகக் கையாளும் ஆற்றல் கொண்ட வீரர்களைக் கொண்டவை என்பதும் எல்லோரும் அறிந்து கொண்ட உண்மையே. ஆனால் சில சந்தர்ப்பங்களை சென்றலைட்ஸ் அணியினர் சிறப்பாகக் கையாண்டமையே அவர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணியினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஜொனியன்ஸ் தவறவில்லை. ஆரம்பக் கட்டத்தில் ஜொனியன்ஸ் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகவே பந்து வீசினார்கள். ஒரு கட்டத்தில் 8 இலக்கு இழக்கப்பட்ட நிலையில் சென்றலைட்ஸ் 128 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்கள். ஆனால் 9-வது இலக்கு விழும் போது 166 ஓட்டங்களுக்கும் இறுதி இலக்கு விழும் போது 203 ஓட்டங்களுக்கும் சென்றலைட்சால் தாவ முடிந்தமை அவர்களது வெற்றிக்குச் சாதகமாக அமைந்ததை மறுக்க இயலாது. இதற்கு காரணம் சுரேசின் தேவைக்கேற்ற மாதிரியான ஆட்டமாகும். ஆனால் அவர் மூலம் வழங்கப்பட்ட பிடிகள் தவறவிடப்பட்டமையை ஜொனியன்ஸ் மிகவும் துக்கமாக நினைவு கூர்வார்கள். அரசரட்ணமும், பிரபாகரனும் தமது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்தார்கள். அணித்தலைவர் சுரேந்திரஜித் தொடக்க ஆட்டக்காரராக வந்து அரைச்சதம் போட்டமை சென்றலைட்சுக்குப் பலமாகஅமைந்த இன்னொரு அம்சமாகும்.

இந்த ஆட்டத்தில் ஜொனியன்சுக்கு பாதகமாக அமைந்த இன்னொரு விடயம் உண்டு 40 பந்துப் பரிமாற்றங்களை வீசிமுடிக்க அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலவேளை $3\frac{1}{4}$ மணித்தியாலங்களாகும் ஆனால் தமது பந்துப் பரிமாற்றங்களைஇவர்கள் $2\frac{3}{4}$ மணித்தியாலங்களில் வீசி முடித்து (இரண்டு பந்துப்பரிமாற்றங்கள் மட்டும் மீதியிருக்க) 203 ஓட்டங்களுக்கு சென்றலைட்சின் சகல ஆட்டக்காரர்களையும்சரித்தார்கள் மதிய போசனத்துக்குமுன் $\frac{1}{2}$ மணித்தியாலங்கள் அவர்கள் துடுப்பெடுத்தாட வேண்டிய நிலைமை இதனால் ஏற்பட்டது. இதன் காரணமாக ஜொனியன்ஸ் அரை மணிநேரத்துக்கு ஒரு ஆட்டத்தொடக்கத்தையும் பின் மதிய போசனத்தின் பின் இன்னொரு ஆட்டத் தொடக்கத்தையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதன் விளைவாக முதல் அரை மணிநேரம் அவர்களுக்கு அழுத்தம் நிறைந்த வேளையாக அமைந்து விட்டது. இக்கால வேளையில் ஒரு இலக்கையும் இழந்து 14 ஓட்டங்களை மட்டும் பெற்றார்கள். மறுபுறம் சென்றலைட்ஸ் 7 பந்துப் பரிமாற்றங்களை வீசி முடித்துவிட்டார்கள். இந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில் அணித்தலைவர் தமக்கு வழங்கப்பட்ட காலவேளையை ஏன் சரிவரப்பயன்படுத்தவில்லை என்பது புரியவில்லை. இது அணித்தலைவர் தம் ஆட்டத்தைச் சரிவர ஒழுங்குபடுத்தாமையையே எடுத்துக் காட்டுகின்றது.

ஜொனியன்ஸ் அணியினர் தம் ஆட்டத்தை ஆரம்பித்தவேளை மிகப்பலமான பந்து வீச்சு அணியைச் சந்தித்து 204 ஓட்டங்களை பெறவேண்டியவர்களானார்கள். இது இலகுவானதல்ல. ஆனால் ஜொனியன்ஸ் துடுப்பாட்ட வரிசை சளைத்ததும் அல்ல. இருந்தும் துடுப்பாட்ட வரிசையில் மாற்றமேற்படுத்திய விதம் ஆரம்பத்திலேயே பல இலக்குகளை இழக்க வேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளியது என்பது பலரது கருத்தாகும். இங்கு பிரசாந்தனின் ஆட்டமும் அவர் பெற்ற 41 ஓட்டங்களும் அவசியம் குறிப்பிடப்படவேண்டியவை. அவருடைய அயராத முயற்சியும் கூட ஜொனியன்ஸ் அணியினை நிமிர்த்தமுடியவில்லை. காரணம் ஆடுகளத்தின் மறுமுனைக்கு வந்தவர்களால் நிலைத்துநிற்க இயலவில்லை. எனினும பிரசாந்தனின் 41-ம் நேர்த்தியானதும், கண்ணுக்கு விருந்தானதுமாகும்

சென்றலைட்ஸ் பந்து வீச்சாளர்கள் திறமையாகசெயற்பட்டார்கள் என்பதை 26.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே ஜொனியன்ஸ் அணியினரால் பெற முடிந்தது என்பதில்இருந்து விளங்கும்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விற்பனை

எம்மிடம் வீடியோ டெக்குகளுக்கு தேவையான
வீடியோ ஹெட் ( Video head )
மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு: **மின்வளம்**

இல. 81, லெப். கேணல் சந்தோசம் தெரு,
( கஸ்தூரியார் வீதி ) யாழ்ப்பாணம்.
(சி-9641)



## யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பாவனையாளர்களுக்கு

எதிர்வரும் யூலை மாதத்தில் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தனது 7 வருட சேவையை நிறைவு செய்கின்றது. இந்நிறைவு நாளன்று உங்களுக்கான சிறப்புப் போட்டிகள் பல காத்திருக்கின்றன. பரிசில்களும் காத்திருக்கின்றன. போட்டிகளில் பங்கு பற்றுங்கள், வெற்றி பெறுங்கள், உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள்.

**போட்டி விபரங்கள்:**

**1. விளையாட்டு**

துரிதநடைப் போட்டி
சைக்கிள் ஓட்டப் போட்டி

**(முடிவு திகதி 30-06-94)**

**2. எழுத்து**

கவிதைப் போட்டி - 1 தாள்
சிறுகதைப் போட்டி - 1000 சொற்கள்
கட்டுரைப் போட்டி - 2000 சொற்கள்

இது, உங்கள் அவயவ இழப்பும் மீள் வாழ்வும் தொடர்பான சொந்த அனுபவமாகக் கட்டாயம் அமைய வேண்டும். உங்கள் ஆக்கங்களை **10-7-94** க்கு முன் உங்கள் முழுப்பெயர் முகவரியுடன் எம்மிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

**3. ஏனையவை**

(அ) செயற்கை அவயவச் செயற்பாட்டுத்திறனை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள்.

**(முடிவு திகதி 30-06-94)**

(ஆ) இளம்பிள்ளைவாதம், பிறப்பில் அங்கக் குறைபாடு உள்ளவர்களுக்கான போட்டிகள்.
(எங்கள் ஸ்தாபனத்தில் பதிவு செய்து உபகரணங்களைப் பொருத்தியவர்களுக்கு மட்டும்.)

**(முடிவு திகதி 30-06-94)**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**இல. 5, பழைய பூங்கா வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.** (சி-9819)


## இரவுபடிப்பகம்

(வடமராட்சி)

அல்வாயில் இலவச இரவு நேரப்படிப்பகம் ஒன்று மெதடிஸ்த திருச்சபையினரால் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இரவு நேர வகுப்புக்குத் தேவையான வெளிச்ச உதவிகளை மேற்படி திருச்சபையினர் செய்து வருகின்றனர். இப்படிப்பகத்தில் அல்வாயைச் சேர்ந்த 80 பிள்ளைகள் நன்மை பெற்றுள்ளனர். (யோ)

## வீரவணக்க கூட்டம்

கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு வட்டத்தில் 5 ஆம், 6ஆம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் வீரவணக்கக்கூட்டம் கடந்த புதன் அன்று இரவு 8 மணியளவில், குடத்தனை வடக்கு மைதானத்தில் நிகழ்வுற்றது.

இவ் வீரவணக்கக் கூட்டத்திற்கு வடமராட்சி கிழக்கு அரசியல் பொறுப்பாளர் கார்த்திகன் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். இதனை அடுத்து நினைவு கூரப்பட்ட ஒன்பது மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து வைத்தனர். இதன் பின்னர் கூட்டம் ஆரம்பமானது. இதில் கடற்புலிகளின் பயிற்சிக்கல்லூரிப் பொறுப்பாளர் திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன், கடற்புலிகளின் யாழ் மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி - சுகி, யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் உரையாற்றினர். இதனையடுத்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.


**விற்பனைக்கு**
**கொழும்பு**
**சீமெந்து, வாட்பிளேட்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில்பெற்றுக்கொள்ளலாம்.

**C. M. சுகந்தினி**
புதி. 309 --157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.


## பொலிஸ் வாகனம் முன் பாய்ந்த எம். பி.

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாக பொலநறுவை நகரில் கட்டப்பட்டிருந்த நீலக் கொடிகளையும், பதாகைகளையும் அறுத்தெறிந்து வந்து கொண்டிருந்த பொலிசாரின் ட்ரக் ஒன்றின் முன்பாக அம்மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. ஒருவர் வீதியின் குறுக்கே படுத்து அவ்வாகனம் மேற்கொண்டும் செல்ல முடியாமல் தடுத்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

சுதந்திரக் சட்சியின் நீலக் கொடிகளையும் வீதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பதாகைகளையும் அறுத்தெறிந்தபடி சீருடை தரித்த நிலையில் பொலிசார் தமது ட்ரக் வண்டியில் வந்துகொண்டிருந்தனர். இதைக்கண்ணுற்ற இம்மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மைத்திரிபால சிறிசேன வீதியின் குறுக்கே அவ்வாகனத்தின் முன் கீழே படுத்துக்கொண்டார். அவ்வாகனத்தின் ஒரு சில்லின் அருகே தனது கழுத்தை வைத்தபடி கிடந்தார்.

இவ்வாறு எம். பி. தமது வாகனத்திற்கு குறுக்கே வீதியில் கிடந்ததையடுத்து பின்புறமாக வேகமாக வாகனத்தை திருப்பியெடுத்த பொலிசார் தமது முயற்சியைக் கைவிட்டு மறைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின்னரும் இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக மைத்திரிபால சிறிசேன சுமார் மூன்றுமணி நேரம் வீதியின் குறுக்கே படுத்திருந்தார்.

அப்பகுதியில் பெருமளவில் மக்கள் திரண்டனர். விரைந்து வந்த பொலநறுவை பொலிஸ் அதிகாரி இச்சம்பவம் குறித்து விசாரணை நடக்கும் என உறுதியளித்ததையடுத்து அவ் எம். பி. தனது எதிர்ப்பை கைவிட்டு எழுந்தார். மக்களும் அவ்விடத்தைவிட்டு கலைந்தனர்.

இச்சம்பவம் நடந்து சில மணி நேரத்தில் இப்பகுதிக்கு இரு பஜிரோ ஜீப்கள் வந்தன. இதில் வந்த கறுப்புத் துணியால் தமது முகத்தை மறைத்திருந்த சில நபர்கள் பொலநறுவை நகரில் எஞ்சியிருந்த ஏனைய சுதந்திரக்கட்சி கொடிகளையும் பதாகைகளையும் வெட்டி எறிந்து விட்டுச் சென்றனர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதாக பின்னர் பொலநறுவை பொலிஸ் அதிகாரி உறுதியளித்தார்.

## 50 ஆண்டுகளுக்கு முன் உருவாகியிருக்க வேண்டும்

### புதிய அமைச்சு குறித்து ஹமீட் கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி புதிதாக அமைத்துள்ள தேசிய இணக்க அமைச்சு 50 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் இப்போதாவது இப்படியொரு அமைச்சு உருவாக்கப்பட்டிருப்பதையிட்டு மகிழ்வடையலாம் என வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீட் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், தேசிய இணக்க அமைச்சு அமைக்கப்பட்டது நாட்டிற்கு நன்மைதரக் கூடியது. வடக்கு - கிழக்கு பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காண நாம் தவறினால் நாடு தனது இலட்சியத்தை அடைவது கடினம் எனவும் அவர் கூறினார்.

## வடபகுதி வந்த லொறிக்குள் தடை செய்யப்பட்ட பொருள்


(கொழும்பு)

வடபகுதிக்கு பொருட்களை கொண்டுசெல்ல முற்பட்ட லொறி ஒன்றில் தடை செய்யப்பட்ட பொருட்களும் இராணுவ சீருடையை ஒத்த துணிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ உடைக்கு ஒத்த

வகைகள், கற்பூரம், பற்றறி போன்றவற்றை இவர்கள் கடத்தி செல்ல முற்பட்டார்கள் என்றும் இதில் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டு, இவர்களிடம் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்

## ஐந்தாம் ஆண்டில் உன் நினைவுடன்...



செல்வன்
**சண்முகம் உதயவர்மன் (பேபி)**
(மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவன்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)


அன்னையின் மடியில் **27. 2. 1972** — அந்நியன் பிடியில் **19. 6. 1989**

''நேற்றுவரை நடந்ததெல்லாம் நினைப்பதில்லை
நெஞ்சங்கள் சில நினைவை மறப்பதில்லை''

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணாமார்.

''உமாவாசம்'' 73, பலாலி வீதி,
புதுக்குடியிருப்பு, கந்தர்மடம்,
முல்லைத்தீவு (8602) யாழ்ப்பாணம்.

## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (சி-9819)

புதி. 309 --157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம். (8596)

டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இராணுவ உடைக்கு ஒத்த நிறத்தைக் கொண்ட துணி

பெறுவதாக இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

உ

★ மங்களகரமான திறப்பு விழா ★

# "கலை வாசன் கலையருவி"

நிகழும் பவ வருடம் 5-ம் திகதி ஆனி மாதம் (19-06-94) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.21 தொடக்கம் 11.56 வரை உள்ள சுபவேளையில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது அவ்வமயம் எமது வளர்ச்சியில் அக்கறை கொண்ட வாடிக்கையாளர், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வளவு காலமும்

## "வீடியோ கலா மினி"

எனும் பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்

## 'வீர கலா ஒளியருவி'

என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை அதி சிறந்த நவீன ரக MIXER முறையில் வீடியோ படம் பிடித்திடவும் நவீன ரக சொக்கட்டான் பந்தல் அமைத்திடவும், கறுப்பு வெள்ளை, கலர் படங்களை சிறந்த முறையில் புகைப்படம் பிடித்திடவும்

**நீங்கள் நாட வேண்டிய ஒரே சிறந்த ஸ்தாபனம்**

**வீர கலா ஒளியருவி**

★ **கலை வாசன் கலையருவி** ★

பஸ்நிலையம்,
வல்லை வீதி,
அச்சுவேலி. (8589)

மா. சிவமூர்த்தி
வீடியோ கலா மினி,
அச்சுவேலி.

## அஷ்ரப்பிற்கு விட்டுவிட தயாராகவுள்ளேன்


### தேசியப்பட்டியல் உறுப்பினர் என்.எம்.புகாரி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மீண்டும் பாராளுமன்றத்திற்கு செல்ல விரும்பினால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக தயார் என என்.எம்.புகாரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் தேசிய பட்டியல் உறுப்பினரான இவர் 'லங்காதிப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றிலே மேற்படி தெரிவித்துள்ளார்.

## 5 ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்
09 01. 1946

துரோகிகளின்
அழிப்பில்
19. 06. 1989

**மு. தங்கவேலாயுதம்**
(மயிலிட்டி)

ஆண்டு ஐந்தாகியும் நினைவுகள்
நீண்டே செல்கின்றன துரோகிகளின்
குண்டுகள் உனைத்துளைக்கையிலும்
கொள்கையின் பிடிநின்றாய் போற்றுகின்றோம்.

**ராஜ், வரதப்பா குடும்பத்தினர்.**

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (இ)



**லெப். பூபதி**
(குமாரசிங்கம் குமாரசங்கர்)
திருமலை

பிறப்பு: 24 - 03 - 1972
வீரச்சாவு: 19 - 06 - 1990

தலைவனின் பாசறையில் பண்பாய்
வளர்ந்த வேங்கையே!
தமிழ்த்தாயின் அடிமை விலங்கு உடைத்திட
களம் பல புகுந்தாய்
வீரச்சமர் பல கண்டாய்
கோட்டையில் எதிரியின் கொட்டம் அடக்கிட
நேரடி சமர் புரிந்தாய் - அந்தோ
நீயும் மாவீரனானாய்
இளம் தளிரே
உன்னை எம் நெஞ்சம் மறக்குமா?
கல்லறையில் உன் உடல் தான் உறங்குதையா
உன் இலட்சியம் என்றும் உறங்குமா?
என்றும் உன் பிரிவால்
ஆறாத் துயருறும்

-- **குடும்பத்தினர்.**

19-06-94 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகளையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

78, கலட்டி வளவு ஒழுங்கை,
பருத்தித்துறை. (8595)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

எதிர்பார்ப்பு அடிக்கடி பொய்க்கும். அதிலும் அதிக ஆசை காட்டும் போது அடிக்கடி பொய்த்து விடும்.

- ஷேக்ஸ்பியர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 19-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

## டி. பி. கொடுத்த ஏமாற்றம்

எதிர்பார்க்கப்பட்டது போலவே சிறிலங்கா ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா, அமைச்சரவையை மாற்றி அமைத்ததோடு சிறிது விரிவாக்கமும் செய்துள்ளார். ஆனால் டி.பி. விஜேதுங்கா செய்த மாற்றமும், விரிவாக்கமும் எதிர்பார்க்கைகளுடன் இருந்தவர்களுக்கு திருப்தி அளித்திருக்குமா? என்பது கேள்விக்குரியதாகும்.

காமினி திசாநாயக்கா, ரொனிடீமெல் ஆகியோருக்கு மந்திரிப்பதவி வழங்கப்பட்டதன் மூலம், அவர்களை டி.பி. விஜேதுங்கா அமைச்சரவைக்குள் கொண்டு வந்துள்ளார். ஆனால் காமினி ஜெயவிக்கிரமபெரேராவிற்கு 'கபினெட்'அமைச்சர் பதவிவழங்க டி.பி. முன்வராமையினால் அவர் அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளவில்லை. இது காமினி ஜெயவிக்கிரம பெரேராவை பொறுத்து முழுமையான ஏமாற்றம் கொடுக்கக்கூடிய தொன்றே ஆகும்.

ஆனால் இவ் அமைச்சரவை மாற்றத்தினால் உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவைத் தவிர வேறு எவரும் திருப்திப்பட்டுக் கொண்டிருக்க நியாயமில்லை. ஏனெனில் அனுரா பண்டார நாயக்காவிற்கு மட்டுமே புதிய அமைச்சு ஒன்று மேலதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனையோர் விடயத்தில் முன்னர் இருந்த அமைச்சுப் பொறுப்புக்களில் சில பிடுங்கப்பட்டு வேறு ஒருவரிடம் கொடுக்கப்பட்டது. அல்லது ஜனாதிபதி தன்னிடமே வைத்துக் கொண்டார். அல்லது எதிர்பார்த்திருந்த அமைச்சுப்பதவி அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

காமினி திசாநாயக்கா பாராளுமன்ற எம். பி யாக மீண்டும் பாராளுமன்றம் புகுந்த சமயம் சபையில் எழுந்த ஆதரவாளரது வரவேற்பின் போது, எதிர்கால ஜனாதிபதியே வருக வருக என எழுந்த கூச்சலுடனும் எதிர்பார்க்கையுடனும் ஒப்பிடும் இடத்து அவருக்கு வழங்கப்பட்ட அமைச்சர் பதவி திருப்திகரமானதாக இல்லை. காமினி திசாநாயக்கா முன்னரும் மகாவலி அமைச்சைக் கவனித்தவராயினும், காணி, காணி அபிவிருத்தி அமைச்சும் அவரிடமே இருந்தது. அத்தோடு மகாவலி அமைச்சு அன்று பெரும் முதன்மை பெற்றும் இருந்தது.

இந்நிலையில் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அமைச்சின் பொறுப்பானது ஒப்பீட்டு ரீதியில் முன்னைய

# உலக உதைபந்தாட்டம்
# ஜேர்மனிக்கு முதல் வெற்றி

(வாஷிங்டன்)

சிக்காகோவில் நேற்று முன்தினம் ஆரம்பித்த 15ஆம் உலக கால்பந்தாட்டப் போட்டியின் முதல் ஆட்டத்தில் தற்போதைய சாம்பியன் ஜேர்மனிகடும்முயற்சியின்பின் பொலிவியாவை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 3 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

ஸ்பெயினுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் விறுவிறுப்பாக நடைபெற்ற மற்றோர் போட்டியில் இரு நாடுகளும் தலா 2 கோல்கள் போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தன தென் கொரியா இறுதிநிமிடங்களிலேயே தனது கோல்களை போட்டது குறிப்பிடத்தக்கது.

உலகக்கிண்ண கால் பந்தாட்டப் போட்டிகளை நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ஆரம்பித்துவைத்தார். தொடக்க விழாவின் வண்ணமிகு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நியூயோர்க் சோல்ஜர் பீல்ட் விளையாட்டரங்கில் நடைபெற்றன.

### இன்றைய போட்டி

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் இன்று அமெரிக்கா - சுவிற்ஸர்லாந்தும், கொலம்பியா-றுமேனியாவும், இத்தாலி - அயர்லாந்தும் மோதுகின்றன.

# வடகொரியாவுடன் அமெரிக்கா இரகசிய இணக்க முயற்சி?

### ஜிம்மி கார்ட்டரின் விஜயத்தின் எதிரொலி

வடகொரியாமீது தடை விதிக்குமாறு கோரும் தனது திட்டத்தை கைவிடவில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. வடகொரிய ஜனாதிபதியுடன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் நடத்தும் பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க அதிகாரிகள் இன்னமும் தடைவிதிக்கும் திட்டம் கைவிடப்படவில்லை என்றனர்.

வடகொரியா சென்றுள்ள ஜிம்மி கார்ட்டர் அமெரிக்கா தடைவிதிப்புக்கான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் என வடகொரிய ஜனாதிபதியிடம் கூறியதாகவும், வடகொரியஜனாதிபதியும்சிலசலுகைகளைக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கொரியப் போரின்போது காணாமற்போன ஆயிரக்கணக்கான அமெரிக்க படைகளை தேட கூட்டுக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் கார்ட்டர் முன்னதாக அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அமெரிக்காஇரகசியமான முறையில் வடகொரியாவுடன் ஒரு இணக்கத்திற்கு வரமுயற்சிப்பதாக கண்டனங்கள் எழுந்துள்ளன. இவற்றை இப்போது அமெரிக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

# மறியல் போராட்டம் நடத்த தி.மு.க விற்கு தடை

(சென்னை)

நாளை திங்கட்கிழமை தி. மு. க. வும் அதன் தோழமை கட்சிகளும் நடத்த திட்டமிட்ட மறியல் போராட்டத்திற்கு தமிழக பொலிஸ் அனுமதி வழங்க மறுத்து விட்டது.

இப்போராட்டம் நடைபெறின் வன்முறை நடைபெறலாம் என்பதால் அனுமதி மறுக்கப்படுவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மாநிலத்தில்69 சதவீத இட ஒதுக்கீடு தொடர வேண்டும் என்பதற்காக மத்திய, மாநில அரச அலுவலகங்கள் முன் மறியல் நடாத்தப் போவதாக இக் கட்சிகள் அறிவித்திருந்தன.

இதே சமயம் இம் மறியல் திட்டத்தை முறியடிக்கும் வகையில் தமது தொண்டர்களை மாநில அரசு கைது செய்து வருவதாக தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கண்டித்துள்ளார். கைதானவர்களை விடுவிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

## சேஷனை சந்திக்க ஜெயலலிதாவிரும்பவில்லை

தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்திக்க விரும்பிய தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷனின் விருப்பத்தை முதல்வர் ஜெயலலிதா உதாசீனம் செய்துள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினர் பதவி தொடர்பாக சுப்பிரமணியம் சுவாமி செய்த புகார்கள் பற்றி டி என். சேஷன் கடைப்பிடித்த நிலைப்பாடே ஜெயலலிதா இவ்வாறு உதாசீனம் செய்யக் காரணம் எனக் கூறப்படுகிறது.

# றுவாண்டாவிற்கு படை அனுப்ப பிரான்சுக்கு ஐ. நா. அனுமதி

# மண்டூர் படையினர் மக்கள்மீது அடாவடித்தனம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் பகுதிகளில் சிறிலங்கா பொலிசார் மற்றும் அதிரடிப் படையினரின் நடவடிக்கைகளால் மக்கள்பெரும் சித்திரவதைப்பட நேருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. 14ஆம் கிராமம், 13ஆம் கிராமம், மருங்கேணிப்பூவல், தம்பலவத்தை போன்ற பகுதிகளில் வாழும் மக்களை பொலிசாரும், அதிரடிப் படையினரும் தினந்தோறும் துன்புறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது

கிடுகு, கயிறு முடிச்சு போன்ற பொருள்களைத் தரும்படியும், கடினமான வேலைகளைச் செய்யும்படி நிர்ப்பந்தித்தும் பொலிசாரும், அதிரடிப் படையினரும் துன்புறுத்தி வருகின்றனர்.

# மோட்.சைக்கிள் திருட்டு நபருக்கு அபராதம், சிறை

பல மோட்டார் சைக்கிள்களை திருடிய ஒருவர் வல்வெட்டித்துறை காவல்துறையினரிடம் மாட்டிக் கொண்டார்.

இத் திருடன் இறுதியாக களவாடிய மோட்டார் சைக்கிளையும் காவல்துறையினர் மீட்டுள்ளனர். விசாரணையின் போது இவர் முன்னரும் பல மோட்டார் சைக்கிள்களை திருடியவர் என தெரிய வந்தது.

இவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர் பிரதீபா குற்றமாக ஐயாயிரம் ரூபா செலுத்துமாறும் அத்தோடு இரண்டு மாத மறியலில் இருக்குமாறும் தீர்ப்புக் கூறினார். (யோ)

# காதலித்து கைவிட்டவருக்கு 20ஆயிரம் ரூபா அபராதம்

(வடமராட்சி)

யுவதி ஒருவரைக்காதலித்து கைவிட்ட குற்றத்திற்காக அவ்விளைஞருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்று தண்டமாக இருபதினாயிரம் ரூபா கட்டுமாறு தீர்ப்பு வழங்கியது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வல்வெட்டித்துறை இலந்தைக்காட்டைச் சேர்ந்த யுவதியை காதலித்து கைவிட்டமையால் இளைஞர் மீது வல்வெட்டித்துறை காவல்துறையினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

நீதிமன்ற நீதியாளர் பிரதீபா அவ்விளைஞரின் குற்றத்திற்காக மேற்படி தண்டனையை வழங்கினார்.

(யோ)

# நியூஸிலாந்திலிருந்து வெள்ளை முயல்குட்டிகள்

நல்லின முயல் விருத்தியை ஊக்குவிப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நியூஸிலாந்திலிருந்து நேரடியாக தாய் இன முயலில் முதற் குட்டிகளில் சிலவற்றை இறக்குமதிசெய்து காமதேனு பண்ணையில் வளர்த்து வருகிறது. இம் முயல்கள் நான்கு, ஐந்து மாத பருவத்தில் 5, 6 கி. கிறாம் எடை இறைச்சி உற்பத்தியை தரவல்லவை என்பது குறிப்பிடத்தக்கது இம் முயற் குட்டிகள் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவியுடன் கொண்டு வரப்பட்டது

# கிராம வளர்ச்சிக்கு ச. ச. நிலையம் படிக்கற்கள்

### ஆண்டு விழாவில் உரை

(வடமராட்சி)

சனசமூக நிலையங்கள் கிராமத்திற்கு தேவையான ஒன்று. கிராம வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் படிக்கற்கள்.

இவ்வாறு புலோலி மத்தி அல்வேரனை இளைஞர் சனசமூக நிலையங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன.

சனசமூக நிலையங்கள் மூலமே கிராம அபிவிருத்தித் திட்டங்கள் மேலும் நடைமுறைப்படுத்த முடியும் ஆகவே சனசமூக நிலையங்கள் தமது கிராம வளர்ச்சியில்

இந்நிலையில் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அமைச்சின் பொறுப்பானது ஒப்பீட்டு ரீதியில் முன்னைய இடத்தில் கூட காமினியை டி.பி. விஜேதுங்கா வைக்கவில்லை என்றே கொள்ள முடியும் காமினி திசாநாயக்கா மீண்டும் ஐ.தே.கவில் சேரப் போகின்றார் என்ற பேச்சு எழுந்தபோது நிதி அமைச்சர் பதவி அல்லது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியே அவருக்குக் கிடைக்கும் என்றே பேசப்பட்டது. இதேசமயம் இவ் அமைச்சுப் பதவிகளுக்காக அவர் பேரம் பேசலில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் காமினிதிசாநாயக்காவிற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியையோ, அன்றி நிதி அமைச்சர்பதவியையோவழங்கப்படாமல்முன்னைய அமைச்சிலும் ஒரு பகுதியை டி.பி. வழங்கியிருப்பது காமினியைப் பொறுத்து ஏமாற்றம் அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதேபோன்றே ரொனிடீமெல்லுக்கும் அமைச்சரவை மாற்றம் ஏமாற்றம் அளித்திருக்கும். டீமெல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சரவையில் 11 வருடங்கள் நிதி அமைச்சராக இருந்து சாதனை படைத்தவர். இன்றைய சிறிலங்காவின் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு காரணகர்த்தாக்களில் ஒருவர்.

இவ்வாறானதொருவர் மீண்டும் அரசியலில் நுழையும் போது தனது பழைய அமைச்சுப்பதவியை அல்லது அதற்கும் கூடுதலான அதிகாரம் உடைய அமைச்சுப் பதவியை எதிர்பார்ப்பதே வழமையாகும். ஆனால் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவி ஓரளவு வளமுள்ள அமைச்சாக இருந்த போதும் டிமெல்லுக்கு முன்னையதற்கு நிகரானது என்று கொள்ளமுடியாது.

இதேபோன்றதொரு நிலையே அமைச்சுக்கள் மாற்றப்பட்ட அமைச்சர்களின் நிலையிலும்உள்ளது. எடுத்துக்காட்டாக பொதுநிர்வாக அமைச்சராக இருந்த பெஸ்ரஸ் பெரேரா அதனையும் விட சற்று பலம் குறைந்த மீன்பிடி நீரியல்வள அமைச்சராகவும், மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி அத்துக்கோரளை வனவள நீர்ப்பாசன அமைச்சாககவும் மாற்றப்பட்டனர். இதை ஒத்த நிலையே யோசப் மைக்கல் பெரேராவிற்கும் எனலாம். ஆனால் இவ்வாறான தொரு நிலை உருவரவதை எதிர்த்தபோதே அலிக் அலுவிகார அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இவ்வாறாக டி.பி. விஜேதுங்கா செய்துள்ள அமைச்சரவை மாற்றமானது அவர் தனது அமைச்சரவைக்குள் எவரும் பலம் பொருந்திய சக்தியாக உருவாவதை விரும்பவில்லை என்றே எண்ணவைக்கின்றது. அதேசமயம் போட்டிக்குழுக்கள் பலவீனமான நிலையில் சமநிலையில் இருக்க வேண்டும் ஜனாதிபதி பலம் பொருந்தியவராக இருக்கவேண்டும் என எண்ணுவது போலும் தெரிகின்றது. இது ஒருவகையில் முன்னர் ஜனாதிபதி பிரேமதாசாவின் வழிமுறையே.

# பிரான்சுக்கு ஐ. நா. அனுமதி

(கிகாலி)

ருவாண்டாவில் நடைபெறும் உள் நாட்டுப் போரில் தலையிட பிரான்சுக்கு ஐ. நா பொதுச் செயலர் அனுமதியளித்துள்ளார். இதனடிப்படையில் 2000 பிரெஞ் துருப்புகள் ருவாண்டா அனுப்பப்படவுள்ளன. இரு மாதங்களுக்கு ருவாண்டாவில் பிரெஞ் துருப்புகள் செயற்படும் எனவும், பின்னர் தனது பொறுப்புகளை அவர்கள் ஐ. நா அமைதிப்படையிடம் ஒப்படைப்பர் எனவும் கூறப்படுகிறது.

பிரெஞ் துருப்புகள் பொது மக்கள் படுகொலையை தடுத்து நிறுத்துவதிலும் நிவாரணப் பொருள் விநியோக பாதுகாப்பிலும் ஈடுபடும் என பிரெஞ் அதிகாரிகள் கூறினர். இத்திட்டத்தை ருவாண்டா சிறுபான்மை டுட்சி இனகிளர்ச்சியாளர்கள் எதிர்த்துள்ளனர். ருவாண்டாவை பிரான்ஸ் தனது காலனித்துவ நாடாக்கும் முயற்சியே இது வெனவும் இதை தாம் அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதே சமயம் ருவாண்டாவில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகின்றன அரசபடைகளின் கட்டுப்பாட்டு பகுதியான கிற்றாராமா பகுதியில் இம் மோதல்கள் நடைபெற்றுவருகின்றன. இப்பகுதியில் பெருமளவில் அரசபடைகளும் பெரும்பான்மை ஹூட்டு இன மக்களும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத்தில் முழுநாள் கதவடைப்பு நடந்தது

(சென்னை)

தமிழ்நாட்டில் 69 சதவிகித இடஒதுக்கீடு தொடர்வதற்கு வசதியாக மாநில அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்கு குடியரசுத்தலைவர் விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமெனக் கோரி தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் முழுவதும் முழு கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த முழு அடைப்பையடுத்து மாநிலம் முழுவதிலும் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது ரயில், பஸ் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்கள் என எவையும் ஓடவில்லை எனினும் நேற்று முன்தினம் அசம்பாவித சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. இந்த முழு அடைப்பைத் தொடர்ந்து மாநில அரசு அலுவலகம் எதுவும் இயங்கவில்லை மாநிலஅரசு விடுமுறையை அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது திரையரங்குகளிலும் பிற்பகல் காட்சிக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

## தஞ்சாவூர் அரண்மனையில் சுரங்கப் பாதை கண்டுபிடிப்பு

(சென்னை)

தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து செல்லும் சுரங்கப் பாதை ஒன்று தஞ்சை நகரில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு வீதியின் கீழ் தளம் இடிந்து வீழ்ந்த போது தரைமட்டத்திற்கு கீழ் 5 அடி ஆழத்தில் இச்சுரங்கப்பாதை இருப்பது தெரியவந்தது.

சுமார் 6 அடி உயரமான இச்சுரங்கப்பாதை நாயக்கர் காலத்தில் அல்லது மராட்டியர் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## உட்கட்சி பூசலே தோல்விக்கு காரணம்

### வாழப்பாடி ஒப்புக் கொள்கிறார்

(சென்னை)

தமிழ்நாட்டில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோல்வியுற்றமைக்கு அக்கட்சியில் நிலவும் உட்பூசல்களே காரணமாகும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கட்சித் தேர்தல்களை காலவரம்பின்றி ஒத்தி வைத்த தலைமைப்பீடத்தின் செயலால் தொண்டர்கள் அதிருப்தியுற்று இருப்பதாகவும், அதனால் தேர்தல் பணியாற்ற அவர்கள் முன்வர வில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## ஜொலிஸ்ரார்

இன்னும் பல சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ள இவ்வேளையில் கழகங்கள் தம் குறை நிறைகளைத் தற்போது நன்கறிந்திருப்பார்கள் எதிரணியினரை நன்கு அவதானித்திருப்பார்கள். ஆகவே எதிர்வரும் மாதங்களில் இன்னும் நிறைவான கிரிக்கெட் ஆட்டங்கள் ரசிகர்களுக்குக் கிடைக்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

கறகள்.

இவ்வாறு புலோலி மத்தி அவ்வேரனை இளைஞர் சன சமூக நிலையம் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா நிலையத் தலைவர் திரு.என்.வரேந்திரராசன் தலைமையில் நடைபெற்ற போது பருத்தித்துறை பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு.ஆ. சிவசுவாமி குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடும் போது கிராம ரீதியாக அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முறைப்படுத்த முடியும் ஆகவே சனசமூக நிலையங்கள் தமது கிராம வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்றார்.

மற்றும்பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட சன சமூக நிலையங்களின் சமாச தலைவர் திரு. சேதுநாயகம், புலோலி மத்தி கிராம அலுவலர் திரு.க. சண்முகநாதன், நிலைய போஷகர் திரு. தங்கவேலாயுதம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

(யோ)

## நாற்றுமேடை திட்டம்ஒன்று ஆரம்பித்து வைப்பு

எமது தேசத்தின் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கோடு, இவ்வருடம் 50,000 மரக்கன்றுகளை நாட்டுவதற்கென நாற்று மேடைத்திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

எமது தேசத்தின் இயற்கை வளங்கள் அளவு கணக்கின்றி அழிக்கப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளாக விறகுக்காக வன்னியிலிருந்து காட்டு மரங்கள் கொண்டு வருவதும் தடைப்பட்டுள்ளன. இதன் காரணமாக குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றை ஈடுசெய்யும்முகமாகவே இந் நாற்றுமேடைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பண்ணைக் காடுகள் வளர்ப்பு, வீதியோர மரநடுகை போன்றவை மேற்கொள்ளப்படவிருக்கின்றன?

இத்திட்டத்திற்கான மரக்கன்று நாற்றுமேடைகள் சுன்னாகம் காமதேனு விவசாயப் பண்ணையில் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது

இவ் 50000 மரக்கன்று உற்பத்தித்திட்டமானது எதிர் காலத்தில் மர நடுகையில் ஒரு வெற்றியை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 06. 19**

**ஞாயிறு இரவு**

08.01 - இசைய ரங்கம் - நிகழ்ச்சியில் பாடுபவர் எஸ். பத்மலிங்கம் அவர்கள்
08.30 - செய்திகள்
08.40 - தொடர் நாடகம் - இலங்கைமண் 28ம் அங்கம்.

**1994. 06. 20**

**திங்கள் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - மணியாரம்
07.30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப்பாடல்கள்

**பிரேமதாசா**

சமன் சுஜீவா நீதிமன்றத்தில் சோரியுள்ளார். அவர் இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பணத்திற்கு உரிமை கோருபவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை அறியும் பொருட்டு பத்திரிகைகளில் இதுபற்றி விளம்பரம் செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

**துறைமுக**

நெஞ்சு நோவு மேலும் தீவிரமடைந்த போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதிலும் அவர் மரணமானார். இவருக்கு இறங்குதுறை ஊழியர்கள் கறுப்புக் கொடி கட்டி அனுதாபத்தை தெரிவித்துள்ளனர்.

(யோ)

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களுடன் 23ஆம் திகதி கொழும்பு செல்லவிருந்த கட்பல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே கொழும்பிற்கு செல்ல இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கப்பலில் கொழும்பு செல்ல உள்ள நோயாளிகளை இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (சி)

# வங்கிப் பணம் கொழும்பு சென்றது

(வடமராட்சி)

யாழ். வங்கிகளில் இருந்து கொழும்புக்கு குறித்த தொகை பணம்இன்று அனுப்பப்பட்டது.

மக்கள் வங்கி. இலங்கை வங்கி ஆகியன இப்பணத்தை 'மாகோ' கப்பல் மூலமாக அனுப்பி வைத்தன. வங்கி உத்தியோகத்தர்களும் இப்பணத்துடன் கொழும்புக்குச் சென்றிருந்தனர்.

யாழ் மாவட்ட வங்கிகளில் தற்போது பணத்திற்கு தட்டுப்பாடு இல்லையெனவும் இங்குள்ள வங்கிகளில் பணம் தேங்கிக் கிடப்பதாகவும் தெரியவருகிறது. குறிப்பிட்ட பணத்திற்குமேல் இங்கு தேங்க விடாமல் கொழும்புக்கு அனுப்பவேண்டும் என்ற வங்கி உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக் கிணங்கவே இப்பணம் அனுப்பப்பட்டது என தெரியவருகிறது


(யோ)

# தமிழ் விழா - 1994

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ் விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பரீட்சைக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு. இ. முருகையன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி முருகையன் அவர்கள் பரிசில்களை வழங்குவார்.

இவ் விழாவில் முக்கிய கலை நிகழ்ச்சிகளாகச் சிறப்புரைகள், கவியரங்கம், பட்டிமண்டபம், பல்லியம், நாட்டுக் கூத்து, நாடகங்கள், மெல்லிசை நிகழ்ச்சி ஆகியன இடம் பெறும்.

## 41-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் துரைச்சாமி துரேஸ்

பிறப்பு 19-04-1954 — இறப்பு 10-05-1994

சீரான சிந்தையையும் சிரித்த உங்கள் முகத்தையும் எங்களால் மறக்க முடியவில்லை ஐயா!

அன்பும், பண்பும், பாசமுமாய் எம்மை
வளர்த்து அன்பாலே எம்மனதை
மூழ்கடித்த எம்முயிர் தெய்வமே
காரணத்தை சொல்லாமல் நீங்கள்
கனவாகி போனது ஏனையா?
நாட்கள் எத்தனை நகர்ந்திங்கே மறைந்தாலும்
இனிய உங்கள நினைவு முகம்
இதயத்தில் மறைந்திடுமோ அப்பா.

இந்தத் துயரச் செய்தி கேட்டு எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து, ஆதரவு தந்தவர்களுக்கு எம் நன்றிகள். எமது இல்லததில் 19-06-94 இன்று நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியையிலும் மதிய போசனத்திலும் வந்து கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தச்சன்தோப்பு — மனைவி: ராஜமலர் (B.A)

(5095) — பிள்ளைகள்: துலாஜினி ரர்கவன்

**கண்டனப்**

கள் அனைவரும் கலந்து கொ.ள உள்ளதால் அன்றைய தினம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வழமையான செயற்பாடுகள் நடைபெறமாட்டாது என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88)

## சிறப்பு இசைக்கச்சேரி

உரும்பராய் ஒடையப்பதி கற்பக விநாயகர் ஆலய 11 ஆம் திருவிழாவான இன்று மாலை 6-00 மணிக்கு சிறப்பு இசைக் கச்சேரியொன்று நடைபெறவுள்ளது. இதில் சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கம் பாடுவார். மேலும் இசைஞானதிலகம் ஆர். இராதாகிருஷ்ணன் வயலின், சங்கீதரத்னம் எம். சிதம்பரநாதன் மிருதங்கம், வித்வான் எஸ். ராஜா மோர்சிங் வாசிப்பர்.


**யாழ். ஸ்ரீதரில்**

Aronold Schwarzenegger

நடித்த

**PREDATOR**

தினசரி

மாலை 4, 6மணி

சனி ஞாயிறு

காலை 10. 30 மணி

மாலை 4, (ணி

(சி- 9822)


## மரண அறிவித்தல்

### திரு. டேவிற் சிறி பத்மநாதன் பிறைசூடி

திரு. டேவிற் சிறிபத்மநாதன் பிறைசூடி காலமானார். அன்னார் முன்னாள் போட்டோ சினெக்ஸ் பொறியியலாளர் கொழும்பு, பண்டத்தரிப்பு 'நிரஞ்சனி' வோச் வேக்ஸ் உரிமையாளரும் ஆவார். இவர் திருமதி ரூத் புஸ்பமணியின் அன்புக் கணவரும், றீற்றா [பிரான்ஸ்], றோஸ் [சுவிஸ்லாந்து], ராணி (பண்டத்தரிப்பு), ராஜி (பிரான்ஸ்), றோமா (பிரான்ஸ்), ரூபி (சுவிஸ்லாந்து), ரதி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பூலோகஇந்திரன் (பிரான்ஸ்), சேவியர் (சுவிஸ்லாந்து), திலகசூரியர் (சில்லாலை), ராஜன் (பிரான்ஸ்), ராம் (பிரான்ஸ்), பகீரதன் (சுவிஸ்லாந்து), மோகன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், றோய், றொஜிக்கா, ரஜீவ் (பிரான்ஸ்), ரஜோபன், பிரியா, நிஷா, நிஜோபன் (சுவிஸ்லாந்து), கார்த்திக்கா, வெறோஜன், றேணுகா (பண்டத்தரிப்பு), மனோஜன், நிரோஜன் (பிரான்ஸ்), ரூக்ஷன், யதுஷ்சன் (பிரான்ஸ்), ஜபேத் (சுவிஸ்லாந்து), ரகேல் கௌதமன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் ஆசை அருமைப் பேரனுமாவார். காலம் சென்ற சொலமன் புஸ்பம் (கொழும்பு), காலம் சென்ற சாமுவேல் (கொழும்பு), ஜேக்கப், போப்ஸ் (கொழும்பு), தேவா தவம் (நுணாவில்), எட்வேட், றெஜினா (சில்லாலை), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3.00 மணியளவில் பண்டத்தரிப்பு C. S. I. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

**திருமதி ரூத் புஸ்பமணி பிறைசூடி**
(மனைவி)

'நிரஞ்சனி'
சண்டிலிப்பாய் றோட்,
பண்டத்தரிப்பு. (8669)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் வள்ளியம்மை

திருமதி வல்லிபுரம் வள்ளியம்மை 12-6-94 இல் லண்டனில் காலமானார். அரச ஒப்பந்தக்காரரும், ஸ்ரீதேவி லொறி உரிமையாளரின் அன்பு மனைவியும், தேவராணி (லண்டன்), ஸ்ரீதேவி (லண்டன்), வேலும் மயிலும் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலராசா, தேவராஜா, அனுஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகலிங்கத்தின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு லண்டனில் 18-6-94 அன்று நடைபெற்றது. 19-6-94 ஞாயிற்றுக்கிழமை இன்று மட்டும் அவரது இல்லத்தில் அனுதாபம் தெரிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

பிரதான வீதி, சங்கானை. (8668) — க. பாலசிங்கம் (மருமகன்)

## மூன்றாண்டு நிறைவின் இதய அஞ்சலிகள்

முத்தாக 23-09-73



வித்தாக 4-06-91

### வீரவேங்கை றஜின்

(பொன்னுத்துரை கிரிதரன்)

(திதி: 19-06-94)

தெருவெல்லாம் தேடுகின்றோம் தம்பியுன் திருமுகத்தை
எங்குமே தெரியவில்லை தம்பியுன் தனிமுகமே-ஆனால்
காண்கின்றோம் உன்முகமே - காணும் தம்பியர்
யாவரிலும்

உ

சிவமயம்

## முக்கிய அறிவித்தல்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
**யாழ். மாவட்டம்**

### பொதுச் சபைக் கூட்டம்

இடம்: **புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்.**

காலம்: **20 - 06 - 94 திங்கட்கிழமை பிற்பகல் 3. 30**

தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், பிரத்தியேக வகுப்புக்களும் 20 - 06 - 94 திங்கள் பிற்பகல் 3. 00 மணிக்கு வகுப்புக்களை நிறுத்தி நிர்வாகிகள் அனைவரும் சமுகம் தந்து உங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-9825)

---

உ
சிவமயம்

## திருமண வரவேற்புபசார அழைப்பிதழ்



அன்புடையீர்,

எல்லாம் வல்ல ஸ்ரீ நடராஜப் பெருமான் பேரருளினால் எமது கனிஷ்ட புத்திரன்

திருநிறை செல்வன் **சிவாபசுபதிக்கும்** திருநிறை செல்வி **மல்லிகாவுக்கும்**

(19-06-1994) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அச்சுவேலியில் உள்ள மணமகளில்லத்தில் நடைபெறும் திருமண விழாவையொட்டி 20-06-94 திங்கட்கிழமை மாலை 4 மணியிலிருந்து மணமகனில்லத்தில் நடைபெறும் வரவேற்புபசார வைபவத்திற்கு, தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

411/2, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(8667)

இங்ஙனம்
சிதம்பரநாதச் செட்டியார்
முத்துக்குமாரனும்
பாரியாரும், குடும்பத்தினரும்.

---

காண்கின்றோம் உன்முகமே - காணும் தம்பியர்
யாவரிலும்
கூடிநிற்கும் மாவீரர் யாவர்க்கும் எம் அஞ்சலிகள்.

அருள் வீதி,
நாவற்குழி.

- குடும்பத்தினர்,
(8606)

---

## கண்ணீர் அஞ்சலி

### வி. கருணாநிதி

எங்கள் நெஞ்சங்களில் நிறைந்த
இனிய நண்பனே!
உங்கள் பிரிவு எங்கள் நெஞ்சத்தை
நெகிழவைத்தது. உன் பிரிவால்
இறங்கு துறையே சோகமயமாக
இருக்கின்றது.

தங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்தித்து நிற்கும்

இறங்குதுறை ஊழியர்கள்
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்.

(சி-9833)

---


## சீமாட்டி ——> பெயர் மாற்றம்

# ★ திருமாட்டி புடைவைக் கடல் ★

**122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**தலைநகரில் முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் கைராசியான முன்னோடிகள்**

(சி-9603)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம்இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம்ஆண்டுஜூன் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.